[20th September 1958

Sri A. VEDARATHNAM: தஞ்சை ஜில்லா பாசனப் பகுதிகளில் உள்ள இடங்களில் மிகவும் நன்றாக விளைகிற "வெரைட்டி", இந்த கட்டாம்பாளை என்ற நெல். அவைகளில், இதுவரையிலும் இந்தப் பரீட் சார்த்த முறைகளின் பலனாக அந்தப் பூச்சிகள் கட்டுப்படவில்லை. அதனால் எராளமான நஷ்டம் வந்து விவசாயிகள் அந்த வெரைட்டியையே விட்டு விட வேண்டிய நிலை வந்திருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படியானால் அந்தப் பூச்சிகளை கண்ட்ரோல் செய்ய வேறு புதிய முயற்சிகள் எதாவது எடுத்துக்கொள்ளப்படுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதைப் பற்றி ஆராய்ச்சி மேலும் செய்யப்பட்டுவருகிறது என்று நான் முன்பே சொன்னேன், ஆனால் அடியோடு இவர்கள் இந்தப்பயிரையே மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற விவரம் அரசாங்கத்தினிடம் இல்லை.

Sri M. C. MUTHUKUMARASWAMI: இந்தப் பூச்சிகளை அழிப்பது என்பது, மிராசுதார்கள் அரசாங்கத்திற்குத்தெரிவித்த பிறகுதான் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அல்லது அரசாங்கமே அதிகம் உத்தியோகஸ்தர்களைப் போட்டு பூச்சிகள் எங்கு எங்கு அதிகம் இருக்கிறது என்று கண்டுபிடித்து அதற்கு சிகிச்சை செயய அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இவை, விவசாயிகள் பயிர் செய்கிற நிலம். விவசாயிகள்தான் முதலில் கவனம் எடுத்துக் கொண்டு அதைச் சொல்ல வேண்டியது. அதைச் சொல்லாமல் அவர்களைக் கேட்காமல் அவர்கள் நிலத்தில் ஒன்றும் செய்ய முடியாது.

D.P.M. Course, Bangalore

* 371 *Q.*—**Sri K. VINAYAKAM** (on behalf of Srimathi T. N. Anandanayaki): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any doctors have been deputed by our Government to undergo D.P.M. Course at Bangalore; and

(*b*) if not, why?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Yes.

(*b*) Does not arise.

Sri S. LAZAR: I would like to know what is meant by this D.P.M. Course.

The Hon. Sri M. A. MANICKAVELU: Diploma in Psychological Medicine.

Temple lands

* 372 *Q.*—**Sri A. VEDARATHNAM**: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களில் வீடு முதலிய கட்டிடங்கள் கட்டியவர்களை அப்புறப்படுத்தாமலிருக்க அரசாங்கத்திற்கு எதேனும் உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால், அதன் விபரம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.